# காய்ச்சூல் பறவையை பற்றி அறிவோம்

*ஓம்கார் கடல் சூழல் மைய தகவல் கையேடு*

**2018**

**Dr. V. Balaji**

**Dr. V. Sekar**

**OMCAR Palk Bay Environmental Education and Research Centre**

**East Coast Road**

**Velivayal, Thanjavur District**

**www.omcar.org**




OMCAR PALK BAY CENTRE

## INFORMATION ABOUT INDIAN PITTA



திணை: விலங்கினம்

தொகுதி: கார்டேட்டா

வகுப்பு: ஏவ்ஸ் (பறவைகள்)

வரிசை: (மரத்தில்) அடையும் பறவை

குடும்பம்: பிட்டிடே

பேரினம்: பிட்டா (Pitta)

இனம்: *P. brachyuran*

**Vernacular name:**

காய்ச்சூல்,
தோட்டக்கள்ளன்,
பொன்னாந்தட்டான்

**பெயரும் உடலமைப்பும்:**

ஆங்கிலத்தில் Indian Pitta என்றழைக்கப்படும் இந்த குருவிகள் பொன்னாந்தட்டான்" என்று தமிழில் அழைக்கப்படும். மேலும் இவை இந்திய பொன்னுத்தொட்டான் அல்லது இந்திய தோட்டக்கள்ளன் என்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன, பொதுவாக இவை நம் கடலோர பகுதிகளில் '***காய்ச்சுல்***' என்று அழைக்கப்படுகிறது. பிட்டா என்றால் “சிறு பறவை” என்று தெலுங்கில் பொருள். ஹிந்தியில் இதன் பெயர் நவ்ரங். அதாவது ஒன்பது நிறங்கள் என்பது பொருள். இதன் உடலில் வானவில்லின் ஏழு நிறங்களுடன் கருப்பு வெள்ளை இரண்டும் சேர்ந்து ஒன்பது ஆகிறது. இதன் சிறகுப் போர்வையில் பல நிறங்களைக் காணலாம் - பச்சை நிற முதுகு, நீல நிறமும் கருப்பு-வெள்ளைமும் கொண்ட இறக்கை, மஞ்சட்பழுப்பு நிற அடி, கருஞ்சிவப்புப் பிட்டம், கண்ணையொட்டி கருப்பு வெள்ளைப் பட்டைகள் - எனவே தான் இதற்கு பஞ்சவர்ணக் குருவி என்றொரு பெயருண்டு; இவை நெஞ்சுப் பகுதியில்

மஞ்சள் வண்ணம் கொண்டவை. உருவ அளவில் இவை ஒரு இடைப்பட்ட அளவு கொண்ட பறவை இனமாகும். மேலும் இவற்றுக்கு *ஆறு மணிக்குருவி, பொன்னுத் தொட்டான், பச்சைக்காடை, காசிக்கட்டிக் குருவி, கஞ்சால் குருவி, காளி* (மலையாளம்) எனப் பல பெயர்களும் உள்ளன.

இவை நீண்ட தூர வலசை போகும் பறவைகளாகும் (Migratory Birds). இலை மற்றும் செடி, கொடிகளில் காணப்படும் இவை சுலபமாக நம் கண்களில் படுவதில்லை. ஏனெனில், இந்தப் பறவை சாதாரணமாக மற்ற பறவைகளைப் போல் உயரப் பறப்பதில்லை. இலைகள் அடர்ந்த கிளைகள் இடையே கிளைக்குக் கிளை சென்று கொண்டிருக்கும். இது இரை தேடும்போது தரையிலேயே தத்தித் தத்திச் சென்று இலை சருகுகளுக்கு கீழே உள்ள புழு பூச்சிகளைத்தேடி உண்ணும். தேவை ஏற்படும் போது சற்றே தாழ பறந்து அருகில் உள்ள மரக் கிளைகளில் உட்காரும். இதன் வண்ணம் கிளைகளில் உள்ள இலைகள் மற்றும் தரையில் கிடக்கும் இலை சருகுகளுடன் ஒன்றி விடுவதால் இது நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

**வகைகள்:**

சுமார் 18 - 20 செ.மீ நீளமுள்ள இந்த வலசை போகும் பறவை இனமானது ஆசியா கண்டத்தில் நான்கு வகைகள் காணப்படுகின்றன. அவையாவன: தோட்டக்கள்ளன் - இந்தியன் பிட்டா - *Pitta brachyuran,* ஃபேரி பிட்டா - *P. nympha,* நீலவிறக்கை பிட்டா - Blue-winged Pitta - *P. moluccensis,* அலையாத்தி பிட்டா - Mangrove Pitta - *P. megarhyncha.* *பொதுவாக* **<u>இமயமலைக்குத் தெற்கே இது இனப்பெருக்கம் செய்து</u>**, குளிர்காலத்தில் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் வலசை வரும். பெரும்பாலும் அடர்த்தி நிறைந்த இலை மற்றும் புதர் பகுதிகளில் காணப்படும் பூச்சிகளை உண்டு வாழ்பவையாகும். பொதுவாக முதன்மை உணவு ஆதாரமாக புழுக்கள், சிலந்திகள், நத்தைகள் போன்றவற்றை எடுத்து கொள்கின்றது. இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும் இந்த பறவையானது வறட்சியான பகுதிகளாகிய அசாம் வட-மேற்கு பகுதி காணப்படுவதில்லை, வடக்கு மற்றும் மத்திய இந்தியா

பகுதிகளுக்கு குடியுரும் பறவை இனமாகும், இந்தியாவின் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் குளிர்காலங்களில் குளிர்காலங்களின் இவைகள் வருகை புரிகின்றன.

**இமயமலை அடிவாரங்களில் இனப்பெருக்கம் செய்யும் இந்த குருவி இனங்கள்,** இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளுக்கு வலசை போகும் பறவையாக கூறப்படுகின்றது. தென் மேற்கு பருவமழை காலங்களில் இனபெருக்கம் செய்கின்ற இவை, மத்திய இந்தியாவில் ஜூன் முதல் ஆகஸ்ட் காலங்களிலும் அதிக அளவில் ஜூன் மாதத்தில் நடைப்பெறுகின்றது, ஜூலை மாதங்களில் வட இந்தியாவிளும் நடைபெறுகின்றது. இவற்றின் கூடு பெரும்பாலும் காய்ந்த இலைகள் மற்றும் புற்களின் உதவியுடன் கட்டப்படுகிறது. கூட்டின் மேற்பகுதியில் ஒரு வட்டமான திறப்புடன் கூடிய ஒரு உருண்டையான அமைப்பு போன்று குறைந்த கிளைகளுடன் உள்ளது. ஒரு கூட்டில் 4 முதல் 5 முட்டைகள் வரைக்காணப்படுகின்றது. முட்டை ஓட்டின் நிறமானது வெள்ளை மற்றும் ஆழமான அரக்கு அல்லது ஊதா புள்ளிகள் மற்றும் கோள வடிவதுடன் காணப்படும். இந்த குருவிகளில் இருந்து பறவைகளுக்கு வரக்கூடிய மலேரியா என்ற நோய்களுக்கான ஒட்டுண்ணிகள் இருப்பதாக ஆராய்ச்சிகள் முலம் கண்டறியப்பட்டுள்ளன. இதன் சுவையானது உள்ளான் குருவிகள் போன்று சுவையாக இருப்பதினால் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இவைகள் உணவிற்காக இவைகள் வேட்டையாடப்பட்டு வருகின்றன. இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் தர வரிசைப்படி இந்த பறவைகளானது Least concern 3.1 என்ற நிலையில் உள்ளது. எனினும், அதிக அதிக அளவில் இவைகள் வேட்டையாடப்படுவதினால் காய்ச்சுல் பறவை இனங்கள் அழிந்து வந்துகொண்டு இருக்கின்றன ஆகையால் இதன் போன்ற இனங்கள் அழியா வண்ணம் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு வழி முறைகளை மேற்கொண்டு, இதன் வளத்தை காக்க உறுதிகொள்வோம்.